# கரூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 27 பயனாளிகளுக்கு ரூ.77.20 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்டங்கள்

## கலெக்டர் டாக்டர் த.பிரபுசங்கர் வழங்கினார்



**கரூர்,டிச.06-**

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் (05.12.2022) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 27 பயனாளிகளுக்கு ரூ.77,19,596 அரசு நலத்திட்ட உதவிகளையும், கலெக்டர் டாக்டர்.த.பிரபுசங்கர், வழங்கினார். இன்றைய கூட்டத்தில் ஓய்வூதியம், வங்கிகடன், இலவச வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, உதவி உபகரணங்கள், குடும்ப அட்டை கோருதல் மற்றும் இதர மனுக்கள் போன்றவைகள் கேட்டு மொத்தம் 346 மனுக்கள் பெறப்பட்டது. இதில் மாற்றுத்திறனாளிகளிடம் 53 மனுக்¬கள் பெறப்பட்டது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனு அளிக்க வரும் மாற்றுத்திறனாளிகளை கூட்ட அரங்கு வரை அழைத்து வருவதை தவிர்த்து, அவர்களுக்கென்று பிரத்யேக இருக்கைகள் அமைத்து அமரவைக்கப்பட்டனர். மாற்றுத்திறனாளிகள் இருக்கும் இடத்திற்கு சென்று கலெக்டர் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய மனுக்களுக்கு ம், பிற மனுக்கள் மீதும் ஒரு வார காலத்தில் துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தகுதியான பயனாளிகளுக்கு உரிய நிவாரணம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது என கலெக்டர் தெரிவிதுள்ளார்கள்.

அந்த வகையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 3 நபருக்கு தலா ரூ.4999 மதிப்பீட்டில் ரூ.14,997 மதிப்பீட்டில் கதொலி கருவிகளையும், 1 நபர்க்கு ரூ.790 மதிப்பீட்டில் ஊன்றுகோல்களையும், 1 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.340 மதிப்பீட்டில் ஊன்றுகோல் மற்றும் கறுப்பு கண்ணாடியும், தாட்கோ திட்டத்தின் கீழ் சார்பில் 22 பயனாளிகளுக்கு தலா ரூ.77,03,469 கடனுதவிகளுக்கான ஆணைகளையும், என மொத்தம் 27 மாற்றுத்திறனாளி மற்றும் பயனாளிகளுக்கு ரூ.77,19,596 மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட கலெக்டர் வழங்கினார்கள் ,

முன்னதாக கரூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் விடுதிகளில் 2021-22 ஆம் ஆண்டின் சிறந்த விடுதிகள் காப்பாளர், காப்பாளினிகளுக்கு முதல் பரிசு ரூ.10,000 –க்கான காசோலை மற்றும் கேடயமும், இரண்டாம் பரிசு ரூ.5,000 –க்கான காசோலை மற்றும் கேடயமும், முன்றாம் பரிசு ரூ.3000 –க்கான காசோலை மற்றும் கேடயத்தினை கலெக்டர் வழங்கினர்கள்.

பின்னர் தமிழ்நாடு மாநில் ஊரக வாழ்வதார இயக்கத்தின் சார்பில் பெண்களுக்கு எதிரான வன்முறையிலிருந்து காக்கும் வகையில் 11 வகையான விழிப்புணர்வு சுவரொட்டியினை வெளியிட்டார்கள்.

தொடர்ந்து தமிழ்நாடு மாநில் ஊரக வாழ்வதார இயக்கத்தின் சார்பில் 1 பயனாளிக்கு தகவல் பதிவிற்கான பணிநியமண ஆணையினையும், பேரூராட்சி துறை சார்பில் வரிதண்டலராக பணிபுரிந்த தங்கத்துரை என்பவர் பணிகாலத்தில் பணியிடை காலமானதை தொடர்ந்து அவரது வாரிசுதார்ரும் மகனுமான ரகுபிரசாத் அவர்களுக்கு புலியூர் பேரூராட்சியில் வரித்தண்டலருக்கான பணிநியமண ஆணையினை கலெக்டர் டாக்டர்.த.பிரபுசங்கர். வழங்கினார்கள்.

இந் நி கழ் வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் எம்.லியாகத், திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் சீனிவாசன், தனித் துணை கலெக்டர் (கலால்) பாலசுப்பிரமணியன், மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை துவக்கி வைத்து, ரூ.35 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக்கட்டிடம்

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்



**புதுக்கோட்டை,டிச.06-**

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டைவிடுதி ஊராட்சியில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் (05.12.2022) துவக்கி வைத்து, கண்காட்சி அரங்கினை பார்வையிட்டு, சிறந்த கால்நடை வளர்ப்பவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டைவிடுதி ஊராட்சி, அரசடிப்பட்டியில், 4,801 நபர்களின் 21,513 கால்நடைகள் பயன்பெறும் வகையில், ரூ.35 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகத்தினை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் இன்றையதினம் திறந்து வைத்து, புதுக்கோட்டைவிடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்களை வழங்கினார்.

மேலும் அரசடிப்பட்டி கால்நடை மருந்தகத்தில், செல்லப்பிராணிகளுக்கான வெறிநோய் தடுப்பூசி முகாமினை துவக்கி வைத்து, செல்லப்பிராணிகளுக்கு செலுத்தப்படும் தடுப்பூசி முறைகள் குறித்து சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கேட்டறிந்தார்.

பின்னர் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் கால்நடைகளின் நலன் காக்க தமிழகம் முழுவதும் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்களை நடத்திட உத்தரவிட்டார்கள். அதன்படி, கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஒன்றியங்களில் ஒரு ஒன்றியத்திற்கு 20 முகாம்கள் வீதம் மொத்தம் 260 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இம்முகாம்களில் கால்நடைகளுக்கு கூடுதல் மருத்துவ வசதிகள், மேம்படுத்தப்பட்ட கூடுதல் கால்நடை இனப்பெருக்க முறைகள், கால்நடை வளர்ப்போருக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு விழிப்புணர்வு முறைகள், செறிவூட்டப்பட்ட தீவன முறைகள் மற்றும் கால்நடைகள் நலன் குறித்து விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் அறிவியல் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்துதல் உள்ளிட்டவைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில், நோய் வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சினை சரி பார்ப்பு, சுண்டுவாத அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள், கருப்பை மருத்துவ உதவி போன்ற நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் கால்நடைகளுக்கு வழங்கப்படவுள்ளது. எனவே கால்நடை வளர்ப்பில் உண்டாகும் சந்தேகங்களுக்கு கால்நடை வல்லுநர்களிடம் அறிவுரைகள் பெற்று பயனடையலாம் என சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந் நி கழ்ச் சி க ளில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.சம்பத், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உதவி இயக்குநர் மரு.ரவீந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் உஷா செல்வம், ஒன்றியக் குழு உறுப்பினர் சகுந்தலாதேவி ராஜேந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் அகஸ்டின், கால்நடை மருத்துவர்கள் மரு.தெட்சிணா மூர்த்தி, மரு.சுவிதா, மரு. பாவை, மரு.ராஜபாண்டி, மரு. செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், வட்டாட்சியர் செந்தில் நாயகி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்;

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பிரச்சார மாவட்ட அளவிலான விழிப்புணர்வு பேரணி

## கலெக்டர் அ.அருண்தம்புராஜ் துவக்கி வைத்தார்




**நாகப்பட்டினம்,டிச.06-**

நாகப்பட்டினம் மாவட்டம் மகளிர் திட்டம் சார்பில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பிரச்சார மாவட்ட அளவிலான விழிப்புணர்வு பேரணியை நாகப்பட்டினம் அவுரித்திடலிலிருந்து கலெக்டர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ், (05.12.2022) துவக்கி வைத்தார்.

நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பிரச்சாரமானது கடந்த 25.11.2022 சர்வதேச பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை ஒழிப்பு தினத்திலிருந்து, எதிர்வரும் சர்வதேச ஒற்றுமை தினமான 23.12.2022 அன்றுவரை நடைபெற்று வருகிறது.

இப்பேரணியில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலிருந்தும் தலா ஒருவர் வீதம் 193 சமுதாய வள பயிற்றுநர்கள் (P ரூஊ) மற்றும் நகர்புற, ஊரக மகளிர் திட்ட பணியாளர்களும் சேர்த்து 250 நபர்கள் கலந்துகொண்டனர். இப்பேரணியின்போது பெண்களுக்கெதிரான வன்முறை தடுப்பு, பெண் கல்வி, பெண் உரிமை, பெண்களுக்கு சம வாய்ப்பு அளித்தல் மற்றும் குழந்தை தொழிலாளர் முறை ஒழித்தல் போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி பேரணியில் பங்கேற்றனர். இப்பேரணி நாகப்பட்டினம் அவுர்pத்திடலிலிருந்து புறப்பட்டு நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகத்திற்கு வந்தது. இப்பேரணியை உதவி திட்ட அலுவலர் ஆர்.முருசேகன், அனைத்து உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட வள பயிற்றுநர், வட்டார வள பயிற்றுநர்கள் மற்றும் மகளிர் திட்ட பணியாளர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது



**பெரம்பலூர்,டிச.06-**

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் நா.அங்கையற்கண்ணி தலைமையில் (05.12.2022) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 296 மனுக்கள் பெறப்பட்டன.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்ததாவது: தங்களது கோரிக்கைகள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் அரசு அலுவலர்களை நாடிவந்து பொதுமக்கள் தரும் மனுக்களுக்கு உரிய ஆய்வுக்கு உட்படுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்கள் நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் அரசு அலுவலர்கள் பணியாற்ற வேண்டும். அதிகபட்சம் ஒரு வார காலத்திற்குள் கோரிக்கை மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும். அவ்வாறு ஒரு வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், மனுவின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை குறித்து சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

மேலும் மழைக்காலம் ஆரம்பித்துவிட்டதால் பொது மக்கள் அனைவரும் குடிநீரை காய்ச்சி வடிகட்டி பின்பு பருக வேண்டும். குழந்தைகளை நீர் நிலைகளுக்கு அருகாமையில் செல்ல விடாமல் பாதுகாப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும். காய்ச்சல் வந்தால் உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று மருத்துவரின் அறிவுரையுடன் மருந்து மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். இக்கூட்டத்தில் பொதுமக்கள் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, தொழில் தொடங்க கடன் உதவி, வீட்டுமனைப்பட்டா, விதவை உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக் கூலி உதவித்தொகை, பட்டா மாறுதல், கல்விக் கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 296 மனுக்கள் பெறப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) கணபதி, தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சரவணன் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறையில் ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் 4.50 கி.மீ சாலை அமைக்கும் பணி

## எம்எல்ஏ ராஜகுமார் தொடங்கி வைத்தார்

**மயிலாடுதுறை,டிச.06-**

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ஒன்றியம் வரகடை கிராமத்தில் தொடங்கி நாராயணமங்கலம், திருவாளபுத்தூர் வழியாக கடக்கம் வரை சுமார் 4.50 கிலோமீட்டர் தொலைவுக்கு சாலை சேதம் அடைந்து காணப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். இவர்களது தொடர் கோரிக்கையயடுத்து இந்த மார்க்கத்தில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் (2021-2022)-இன் கீழ் ரூ. 3.73 கோடி மதிப்பீட்டில் புதிதாக சாலை அமைக்கும் பணி தொடங்கியது. இந்த பணியினை மயிலாடுதுறை சட்டப்பேரவை உறுப்பினர் ராஜகுமார் தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட குழு உறுப்பினர் இளையபெருமாள், ஒன்றிய பொறியாளர் ராஜேஷ்கண்ணன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஊராட்சி தலைவர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருச்சி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் மா.பிரதீப் குமார் தலைமையில் நடைபெற்றது



**திருச்சி,டிச.06-**

தி ருச் சி ராப் பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ¬¬மா.பிரதீப் குமார், தலைமையில் (05.12.2022) நடைபெற்றது. இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், சாதிச் சான்றுகள், இதரச் சான்றுகள், குடும்ப அட்டை, முதியோர் உதவித் தொகை, நலத் திட்ட உதவிகள், அடிப்படை வசதிகள், திருமண உதவித் தொகை, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பொதுமக்களிடமிருந்து 587 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

முன்னதாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் இணைந்து 30வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் கடந்த 26.11.2022 அன்று நடத்தப்பட்டது. அதில், 150க்கும் மேற்பட்ட அறிவியல் படைப்புகள் இடம்பெற்றதில், தொட்டியம் வட்டம், அரங்கூர் உயர்நிலைப்பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கும் மாணவிகள் சுவாதி ஸ்ரீ, சண்முகப்பிரியா படைப்பான “அரங்கூரில் வாழும் ராஜகம்பளா சமுதாய மக்களின் வாழ்க்கை தரத்தை ஆய்ந்து அறிதல்” (“வுழ ளுவரனல வாந டுகைந ளுவலடந முக சுயதயமயஅடியடய ஊழஅஅரnவைல டுள்ளெ”) என்ற படைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்மாணவிகள் வருகின்ற டிசம்பர் 10, 11 தேதிகளில் தூத்துக்குடியில் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள உள்ளார்கள். இம்மாணவிகள் (05.12.2022) மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து, அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவான டிசம்பர் 3ல் தமிழக அளவில் மாற்றுத்திறனாளிகளுக்காக சிறந்த முறையில் சேவை புரிந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த இன்டேக்ட் அறிவுசார் குறைபாடுடைய சிறப்புப் பள்ளிக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கியதற்காக ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டி என்ற நிறுவனத்திற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விருது வழங்கப்பட்டது. மேற்கண்ட இவ்விரு நிறுவனங்கள் விருதினை கலெக்டர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துக்களைப் பெற்றனர். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.அபிராமி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித் துணை கலெக்டர் என்.செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முகஉதவியாளர்(நிலம்) ஏழுமலை,மாவட்ட வழங்கல் அலுவலர் எஸ்.ஆர்.சுப்பையா, உதவி ஆணையர்(கலால்) ரெங்கசாமி உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# திருமருகலில் ஜெயலலிதா நினைவுநாள் மவுன ஊர்வலம்



**நாகப்பட்டினம்,டிச.06-**

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 6 -ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருமருகலில் அதிமுக சார்பில் மவுன ஊர்வலம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் எஸ்.ஆசைமணி தலைமை வகித்தார்.திருமருகல் ஒன்றிய செயலாளர்கள் இரா.ராதாகிருட்டிணன், எம்.பக்கிரிசாமி, மாவட்ட துணைச் செயலாளர் அபுசாலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மவுன ஊர்வலம் திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலக வாசலில் தொடங்கி முக்கிய வீதிகளின் வழியாக திருமருகல் பேருந்து நிலையத்தில் வந்து முடிவடைந்தது. தொடர்ந்து திருமருகல் பேருந்து நிலையம்,சந்தைப்பேட்டை கடைத் தெரு ஆகிய இடங்களில் வண்ண மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் திரு உருவப்படத்திற்கு கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர் திருமேனி,ஒன்றிய பேரவை செயலாளர் எஸ்.ஏ.ராஜேஷ் குமார், மாவட்ட இளைஞரணி தலைவர் ஆர்.ராம்சந்தர் மாவட்ட பிரதிநிதி பெரியமணி ஒன்றிய பொருளாளர் அருள்மணி,திட்டச்சேரி முன்னாள் பேரூர் செயலாளர் எஸ்.எம்.முயீனுதீன் உள்பட கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

அதேபோல் திட்டச்சேரி பேருந்து நிலையத்தில் வண்ண மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் திரு உருவப்படத்திற்கு நகர செயலாளர் டி.எஸ்.அப்துல் பாசித் தலைமையில் திட்டச்சேரி நகர நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.அதேபோல் திருமருகல் ஒன்றியத்துக்கு உட்பட்ட 39 ஊராட்சிகளிலும் ஜெயலலிதாவின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

BEFORE THE HON'BLE I ADDITIONAL FAMILY COURT AT CHENNAI
I.A. No.:03 OF 2022 in
H.M.O.P. No.:1318 OF 2021
Mr.A.LUCAS JAYAKUMAR,
Male, aged about 29 years,
Son of Aruldoss,
New No.:49B, Thiru-Vi-Ka Quarters,
Slum Part Teynampet,
Teynampet, Chennai-600018.
......PETITIONER/PETITIONER
-Versus-
Mrs.CELIN CHRISTAL,
Female, aged about 26Years
Wife of A.Lucas Jayakumar,
Daughter of Christopher,
......RESPONDENT/RESPONDENT
To,
Mrs.CELIN CHRISTAL,
Female, aged about 26Years
Wife of A.Lucas Jayakumar,
Daughter of Christopher,
No.409, 'N' Block, T.V.K Nagar,
Teynampet, Chennai-600018.
NOTICE
In the reference to the above said Interlocutory Application No.03 of 2022 in O.P. No.1318 of 2021 filed by the Petitioner, which was taken up by the Hon'ble I Additional Family Judge, Chennai on 24/11/2022 and the Hon'ble Judge was pleased to allow and ordered "Substitute Service" to you on or before 19/12/2022. Kindly Take Notice and You are hereby called up to appear in person on 19/12/2022 before the Hon'ble Court at 10:30 a.m., failing which the above said Application will be heard and decided on your absence.
Mr.A.LUCAS JAYAKUMAR
PETITIONER

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருப்போரூர்
அசல் வழக்கு எண்:211/2022
N.சரவணகுமார் .....வாதி
எதிர்
G.சத்யவாணி ......பிரதிவாதி
பெறுநர் :-
G.சத்யவாணி,
க/பெ குணசேகர்
எண்:188, மாரியம்மன் கோவில் தெரு,
பழைய மகாபலிபுரம் சாலை,
பையனூர், செங்கல்பட்டு.
மேற்படி வழக்கில் வாதி சார்பில் ஒரு நிரந்தர உருத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது 11.01.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது, எனவே அன்று மேற்சொன்ன கோர்ட்டில் காலை 10.30 மணிக்கு, தாங்கள் நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறும் பட்ச்சத்தில் ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்படும் என்பதை அறிந்துகொள்ளவும்.
இப்படிக்கு
K. வரதராஜன்
மனுதாரர்/ வாதியின் வழக்கறிஞர்

மேன்மைமிகு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆலந்தூர்.
R.A.No.39 of 2022 In
R.C.O.P.No.124 of 2018
திரு. சித்தார்த் கிருஷ்ணகுமார், அவரின் பொது அதிகாரம் பெற்ற முகவர் திரு. கிருஷ்ணகுமார்.
....மனுதாரர்/நில உரிமையாளர்.
எதிர்-
திருமதி. மைத்ரி ரெட்டி,
.. எதிர் மனுதாரர்/வாடகை தாரர்
To:
எதிர்மனுதாரர்/ வாடகைதாரர்.
1. திருமதி. மைத்ரி ரெட்டி,
க/பெ. திரு.ராவீந்திர நரேன் ரெட்டி,
பிளாட் நெம்பர் 30,
பழைய எண். 142,
புதிய எண். 112, வி.ஜி.பி. கோல்டன் சீ வியு பகுதி I, 4-வது மெயின் ரோடு,
பாலவாக்கம், சென்னை-600 041.
இதனால் மேற்படி எதிர்மனுதாரர்/வாடகைதாரர், ஆகிய தங்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் மேற்படி மனுதாரர்/நில உரிமையாளர் தங்களுக்கெதிராக மேற்படி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செயதுள்ள மனுதாரர் தரப்பு சான்றாவணங்களை திரும்ப பெறுவதற்கான மனுவானது R.A.No. 39 of 2022 in R.C.O.P. No. 124 of 2018-ஆக, கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி மனுவில் இந்நீதிமன்றத்தில் தாங்கள் நேரடியாக ஆஜராவதற்காக 09.12.2022 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அன்று (09.12.2022) காலை 10.30 மணி அளவில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களின் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவேண்டியது. தவறினால் மேற்படி சான்றாவணங்களை திரும்ப பெறுவதற்கான மனு தங்களுக்க எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
V.முத்துராமன்,
மனுதாரர் வழக்கறிஞர்

IN THE COURT OF HON'BLE PRINCIPAL FAMILY COURT AT CHENNAI
Tr.O.P.NO.5151 of 2022
D.ASWATH RAJAN, MA-37,
S/o.V.K.Dhananjayan,
No.607, Adinath Ashirwadk
G.N.T Road, Madhavaram,
Chennai-600 110.
...Petitioner
-Vs-
Mrs.P.L.DIVYA, F/A-35.
W/o.Aswath Rajan.
No.6, Parisambandhar Street,
Venkateshwara Nagar,
Ambattur,
Chennai-600 053.
...Respondent
Please take notice that the petitioner filed transfer petition against the respondent before the Hon'ble Principal Family Court at Chennai in Tr.O.P.No.5151 of 2022 has posted for the respondent appearance on 15.12.2022 before the above said Hon'ble Court at 10.15 a.m. failing which the matter will be decided in your absence.
Thanking you,
Yours,
(D.ASWATH RAJAN)



திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13 வது வட்ட திமுக சார்பில் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவையொட்டி சாத்துமா நகரில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் கேக் வெட்டி பொதுமக்களுக்கு வெஜிடபிள் பிரியாணி, கேசரியுடன் வழங்கினர். இதற்கான ஏற்பாடுகளை வட்ட செயலாளர் கேபிள் டிவி எம்.ராஜா மாமன்ற கவுன்சிலர் ஆர்.சுசீலா ராஜா செய்திருந்தனர்.



ஜெயலலிதா 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் மணலி சாலையில் உள்ள கே.ஜி.எல் அருகே வட்ட செயலாளர்கள் அரிமா டி.எஸ்.பிரகாஷ், அம்சா தோட்டம் ராஜி ஏற்பாட்டில் 200 பேருக்கு பகுதி செயலாளர் அஜாக்ஸ் எஸ்.பரமசிவம் காலை சிற்றுண்டி வழங்கினார். அருகில் மாமன்ற முன்னாள் கவுன்சிலர் எஸ்.சூரிய பாபு உட்பட பலர் உடனிருந்தனர்.



ஜெயலலிதா ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்குப் பகுதி அதிமுக சார்பில் பெரியார் நகரில் மாமன்ற கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் ஏற்பாட்டில் ஆயிரம் பேருக்கு அன்னதானம், புடவை ஆகிய உதவிப் பொருட்களை முன்னாள் அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ., கே.குப்பன் ஆகியோர் வழங்கினார்கள். அருகில் பகுதி செயலாளர் அஜாக்ஸ் எஸ்.பரமசிவம் மாவட்ட அவைத்தலைவர் பி.ராஜேந்திரன் அம்மா பேரவை செயலாளர் ஜி.ரவிக்குமார் உள்ளனர்.



ஜெயலலிதா ஆறாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12வது வட்டச்செயலாளர் காலடிப்பேட்டை எஸ்.முரளி ஏற்பாட்டில் பகுதி செயலாளர் அஜாக்ஸ் எஸ்.பரமசிவம் முன்னிலையில் காலடிப்பேட்டை மார்கெட்டில் ஏழை எளியோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



ஜெயலலிதாவின் 6ம் ஆண்டு நினைவஞ்சலி திருத்தணியில் அனுஷ்டிக்கப்பட்டது. தாலுக்கா கூட்டுறவு சங்க தலைவர் எம்.ஜெயசேகர பாபு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் அமைப்பு செயலாளர் திருத்தணி கோ.அரி ஜெயலலிதா எம்.ஜி.ஆர். மற்றும் அண்ணா ஆகியோரின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் ஆவின் சேர்மன் வேலஞ்சேரி ஜே.டி.கவிச்சந்திரன் முன்னாள் நகராட்சி கவுன்சிலர்கள் கேபிள் சுரேஷ் சி.முனுசாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஜெயலலிதா நினைவு தினத்தை முன்னிட்டு திருவள்ளூரில் அவரது உருவப்படத்திற்கு அதிமுக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்து, அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ஏ.பாஸ்கரன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி தலைவர் எஸ்.ஏ.நேசன்,கூட்டுறவு தலைவர் வளையாபதி,நகர மாணவரணி செயலாளர் வெங்கடேசன்,சிறுபான்மை பிரிவு கமர்தீன்,கோவிந்தராஜ் பங்கேற்றனர்.



ஜெயலலிதாவின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின் அயனம்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் ஜெயலலிதாவின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். உடன் ராஜா (எ) பேரழகன், எம்.என்.இமானுவேல், கிஷோர், எம்.பி.தென்றல்குமார், எம்.ஆர்.முனியன், ஏ.பாரத்,எம்.பாரதி, ஏ.மூர்த்தி, துரைராஜ் ஜி.கே.பாலாஜி மற்றும் பலர் உள்ளனர்.

# திருக்கண்டலம் ஊராட்சி மேட்டுப்பாளையம் பகுதியில் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா



**ஊத்துக்கோட்டை, டிச-06.**

திருக்கண்டலம் ஊராட்சி மேட்டுப்பாளையம் பகுதியில் நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் திமுக எல்லாபுரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக திமுக மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருக்கண்டலம் ஊராட்சி மேட்டுப்பாளையம் பகுதியில் அரிசி மற்றும் அறுசுவை உணவான பிரியாணி உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி திமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வியாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் ஆலோசனைப்படி மேட்டுப்பாளையம் பகுதியில் ஏழை எளிய மக்களுக்கு 5 கிலோ அரிசி மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி எல்லாபுரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆ.சக்தியவேலு தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய அவைத் தலைவர் டி.கே.முனிவேலு, ஒன்றிய துணை செயலாளர் ப.ராஜேஸ்வரி பாஸ்கர், ஒன்றிய பொருளாளர் கே. எஸ்.எம்.குப்பன்,

மாவட்ட பிரதிநிதி தணிகாசலம், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தினேஷ்குமார், கிளை கழக செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 4-வது வார்டு கிளைச் செயலாளர் எஸ்.குப்புசாமி, இளைஞரணி சரண்ராஜ் உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் சிறப்பான முறையில் செய்திருந்தனர். இதில் மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் தாம்பரம் மாநகராட்சி ஊழியர் சாவு: விபத்தை வேடிக்கை பார்த்தபடி சென்றவரும் லாரியில் மோதி பலி

**சென்னை டிச 6-**

போரூர் அருகே மோட்டார்சைக்கிள் விபத்தில் தாம்பரம் மாநகராட்சி ஊழியர் பலியானார். இந்த விபத்தை வேடிக்கை பார்த்தபடி சென்ற மின்வாரிய ஊழியரும், லாரியில் மோதி உயிரிழந்தார்.

அம்பத்தூர் அடுத்த ஒரகடம், காந்திநகர் பகுதியை சேர்ந்தவர் யோவான் (வயது 52). இவர், தாம்பரம் மாநகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து வந்தார். நேற்று முன்தினம் இரவு வேலை முடிந்து தனது மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார். தாம்பரம்-மதுரவாயல் பைபாஸ் சாலையில் போரூர் ஏரி அருகே சென்றபோது அடையாளம் தெரியாத வாகனத்தின் மீது இவரது மோட்டார்சைக்கிள் மோதியது. இதில் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் படுகாயம் அடைந்த யோவான், அதே இடத்தில் பரிதாபமாக இறந்தார். இதுபற்றி தகவல் அறிந்துவந்த பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார், விபத்தில் பலியான யோவான் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது தாம்பரம் அடுத்த படப்பை, சக்தி நகரை சேர்ந்த தங்கராஜ் (58) என்பவர் மோட்டார் சைக்கிளில் மதுரவாயல்-தாம்பரம் பைபாஸ் சாலையில் சென்று கொண்டிருந்தார். யோவான் பலியான இடத்தில் போலீசார் அதிகளவில் நிற்பதை கண்ட தங்கராஜ், விபத்தை வேடிக்கை பார்த்தபடியே சென்றார். அப்போது சாலையோரத்தில் நிறுத்தி இருந்த லாரி மீது மோதியதில் படுகாயம் அடைந்த அவரும் அதே இடத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். பலியான தங்கராஜ், சென்னை கெல்லிசில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் வேலை செய்து வந்தார். வேலை முடிந்து வீட்டுக்கு மோட்டார்சைக்கிளில் திரும்பி சென்றபோது விபத்தில் சிக்கியது தெரிந்தது. இதையடுத்து பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார், யோவான் உடலுடன், சாலையின் எதிர் திசையில் இறந்து போன தங்கராஜ் உடலையும் சேர்த்து இருவரது உடலையும் பிரேத பரிசோதனைக்காக போரூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கொளத்தூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் சங்கிலி பறிப்பில் ஈடுபட்ட 3 பேர் கைது

**சென்னை டிச 6-**

சென்னை, கொளத்தூர், யுனைடெட் காலனியைச் சேர்ந்த நாகராணி, என்பவர் கடந்த 1 ம் தேதி அன்று மாலை, கொளத்தூர், திருப்பதி நகர் விரிவு, ஜவஹர் தெருவில் நடந்து சென்ற போது, இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் நாகராணியின் கழுத்திலிருந்த 6 சவரன் தங்கச்சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து நாகராணி கொடுத்த புகாரின்பேரில், கொளத்தூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கொளத்தூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தினருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, அதில் பதிவான குற்றவாளிகள் உருவம் மற்றும் இருசக்கர வாகனத்தின் அடையாளங்களை கொண்டு மேற்படி சங்கிலி பறிப்பில் ஈடுபட்ட 1.மணிகண்டன் (எ) மணி, 2.மோகன், 3.கவியரசன், ஆகிய 3 பேர் கைது செய்தனர். விசாரணையில் எதிரி கவியரசன், ஆள்நடமாட்டம் இல்லாத தெருக்களில் நோட்டமிட்டு தனியாக நடந்து செல்லும் பெண்கள் மற்றும் வயதான நபர்கள் குறித்து தகவல் தெரிவிப்பதும், உடனே எதிரிகள் மணிகண்டன் (எ)மணி மற்றும் மோகன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் சென்று தனியாக நடந்து செல்லும் நபர்களிடம் சங்கிலி பறிப்பில் ஈடுபடுவதும், இவ்வாறு இவர்கள் மாதவரம், ராஜமங்கலம், ஜெ.ஜெ.நகர், திருமங்கலம் ஆகிய காவல் நிலைய எல்லைகளில் சுமார் 12 சங்கிலி பறிப்பு குற்றங்களில் ஈடுபட்டுள்ளதும், மேற்படி இருசக்கர வாகனத்தை ஐசிஎப் பகுதியில் திருடியதும் தெரியவந்தது. அதன்பேரில், எதிரிகளிடமிருந்து 43.5 சவரன் தங்க நகைகள் மற்றும் குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.



ஜெயலலிதா 6-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவாலங்காடு ஊராட்சி தேரடியில் திருவுருவபடத்திற்கு அதிமுக நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் ஊராட்சிமன்றதலைவர் ஆர்.ரமேஷ்,முன்னாள் ஊராட்சிமன்றதலைவர்சு.அனல்சேகர்,கிளைசெயலாளர்கள் ஏ.கமலநாதன், பரந்தாமன்,முன்னாள் வார்டு உறுப்பினர் மஞ்சுளா மதுரைவீரன்,அருணா கலந்து கொண்டனர்.



ஜெயலலிதாவின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி மதுரவாயல் 146 வது வடக்கு வட்ட செயலாளர் எம்.பாரதி ஏற்பாட்டில் பகுதி செயலாளர் தேவதாஸ் ஜெயலலிதாவின் படத்திற்குஅஞ்சலிசெலுத்தினார்.உடன்பாலாஜி,மதன்ராஜ், டில்லி, ஆறுமுகம் மாணிக்கம், லோகநாதன், நாரயாணசாமி, குபேந்திரன் உள்ளனர்.

# கோயம்பேடு பஸ் நிலையத்தில் செல்போன் பறித்த 2 பேர் கைது

**சென்னை டிச 6-**

கோயம்பேடு பஸ் நிலையத்தில் செல்போன் பறித்த இருவரையும் பொதுமக்கள் மடக்கிப்பிடித்து தர்மஅடி கொடுத்தனர். சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்தில் நேற்று அதிகாலையில் நடந்து சென்ற ஒருவரிடம் இருந்து மர்ம நபர்கள் 2 பேர் செல்போனை பறித்து விட்டு தப்பி ஓடினார்கள். செல்போனை பறிகொடுத்தவரின் அலறல் சத்தம் கேட்டு அங்கிருந்த பொதுமக்கள், தப்பி ஓடிய செல்போன் கொள்ளையர்கள் இருவரையும் மடக்கிப்பிடித்து தர்மஅடி கொடுத்தனர். பின்னர் 2 பேரையும் கோயம்பேடு போலீசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் அவர்கள், கோயம்பேடு ஜெய் நகரை சேர்ந்த ஜெகன் (வயது 21), சரவணன் (30) என்பதும், இவர்கள் இருவரும் கோயம்பேடு பஸ் நிலையத்தில் அதிகாலையில் பஸ்சில் இருந்து இறங்கி நடந்து செல்பவர்களை குறி வைத்து செல்போன்களை பறித்து செல்வதை வாடிக்கையாக கொண்டு இருந்ததும் தெரியவந்தது. 2 பேரையும் கைது செய்த போலீசார், அவர்களிடம் இருந்து செல்போனை பறிமுதல் செய்து, மேலும் விசாரித்து வருகின்றனர்.

# குடிபோதையில் போலீசை தாக்கிய பெண், ஆண் நண்பருடன் கைது

**சென்னை டிச 6-**

தேனாம்பேட்டை போக்குவரத்து பிரிவு போலீஸ் ஏட்டு ராமமூர்த்தி கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டார்.

அவர் சோதனையில் ஈடுபட்டபோது பெண் ஒருவர் மோட்டார்சைக்கிள் ஓட்டி வந்தார். அவருக்கு பின்னால் வாலிபர் ஒருவரும் இருந்தார்.மோட்டார் சைக்கிளை நிறுத்திய ஏட்டு அந்த பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்ததால் வாயை ஊதச் சொன்னார். அவர் மது குடித்து இருந்ததால் ஊத மறுத்தார். இதனால் போலீசுக்கும் அந்த பெண்ணுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த பெண் ஏட்டுவை தாக்கினார்.இதையடுத்து இருவரிடமும் போலீசார் குடிபோதையில் இருந்ததற்கான பரிசோதனை மேற்கொண்டனர். விசாரணையில் அந்த பெண்ணின் பெயர் ஷெரின் பானு (48). தனியார் நிறுவனத்தில் நிதி ஆலோசகராக பணியாற்றி வருவது தெரிய வந்தது. நுங்கம்பாக்கத்தில் வசித்து வரும் அவர் மும்பையைச் சேர்ந்த ஆண் நண்பர் விக்னேஷ் (30) என்பவருடன் ஓட்டலுக்கு சென்று விட்டு மது போதையில் வாகனத்தில் வரும்போது போலீசாரிடம் சிக்கி கொண்டது தெரிய வந்தது.போக்குவரத்து போலீசை தாக்கிய பெண் ஷெரின் பானு மற்றும் விக்னேஷ் ஆகிய இருவரையும் தேனாம்பேட்டை போக்குவரத்து போலீசார் 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

# தண்ணீர் கேன் நிறுவனத்தில் செல்போன்களை திருடியவர் கைது

**சென்னை டிச 6-**

சென்னை, மதுரவாயல், மேட்டுக்குப்பம் மெயின் ரோடு, கண்ணப்பன் நகரை சேர்ந்தவர் உடையார் அதே பகுதியில் தண்ணீர் கேன் நிறுவனம் நடத்தி வருகிறார். அதிகாலை மேற்படி நிறுவனத்திற்கு தண்ணீர் கேன் ஏற்ற வந்த நபர் ஒருவர், மேற்படி நிறுவனத்திற்குள் நுழைந்து ஊழியர்களின் 2 செல்போன்களை திருடிக்கொண்டு தப்பியுள்ளார். இது குறித்து மேற்படி தனியார் நிறுவனத்தின் மேலாளர் உடையார் மதுரவாயல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி செல்போன் வழக்கில் சம்பந்தப்பட்ட செபாஸ்டின், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட செபாஸ்டின் மீது ஏற்கனவே 2 திருட்டு வழக்குகள் உள்ளது தெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட செபாஸ்டின் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# சென்னை ஏழுகிணறு பகுதியில் வடமாநில நபரின் செல்போன் பறிப்பில் ஈடுப்பட்ட சிறுவனுடன் வாலிபர் கைது

சென்னை டிச 6-

உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த சந்தீப், என்பவர், கொத்தவால் சாவடி பகுதியில் பானிபூரி கடையில் வேலை செய்து அங்கேயே தங்கி வருகிறார். சந்தீப், தனது சொந்த ஊருக்கு செல்வதற்காக சென்ட்ரல் இரயில் நிலையம் செல்ல நேற்று அதிகாலை கொண்டித்தோப்பு, சுந்தரமுதலி தெரு மற்றும் அம்மன் கோயில் தெரு சந்திப்பில் நடந்து செல்லும்போது, அங்கு நின்றிருந்த 2 நபர்கள் சந்தீப்பிடம் பேச்சு கொடுத்து அவர் வைத்திருந்த செல்போன் மற்றும் பணம் ரூ.300/- ஐ பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து சந்தீப்பின் முதலாளி கொடுத்த புகாரின்பேரில், ஏழுகிணறு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**வாலிபர் கைது**

ஏழுகிணறு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டில் ஈடுபட்ட பிரதீப், என்பவரை கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 17 வயது இளஞ்சிறாரை பிடித்து விசாரணை செய்தனர். எதிரிகளிடமிருந்து புகார்தாரரின் 1 செல்போன் மற்றும் பணம் ரூ.300/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி பிரதீப் மீது ஏற்கனவே யானைகவுனி காவல் நிலையத்தில் 1 திருட்டு வழக்கு உள்ளது தெரியவந்தது.

